கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

அசல் வழக்கு எண். 185/2016

19.01.2021

பெயர்: முத்துபொம்மு

வா.சா.: 1

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை:

இந்த வழக்கை எனது தந்தை முத்துபாண்டிதான் வழக்கறிஞருக்கு விபரம் சொல்லி தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரிதான். இந்த வழக்கு விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது தந்தைக்குத்தான் தெரியும் என்றால் இல்லை, எனக்கும் தெரியும். எனது தகப்பனார் எங்கு வசிக்கிறார் என்றால் ஒன்றாகத்தான் வசிக்கிறோம். நீதிமன்றத்திற்கு வந்துள்ளாரா என்றால் வரவில்லை. நல்ல ஆரோகக்கியமாகத்தான் எனது தந்தை உள்ளார் என்றால் இல்லை, நடக்க முடியாது, கண்பார்வை குறைவு. எவ்வளவு நாட்களாக நடக்க முடியாமலும், கண்பார்வை குறைவும் உள்ளது என்றால் 2 வருடங்களாக அப்படித்தான் உள்ளது. நான் தாக்கல் செய்த நிரூபண வாக்கு மூலத்தில் அவ்வாறு எனது தந்தைக்கு குறைபாடு உள்ளது என்று காண்பிக்க வில்லை என்று சொன்னால் நான் பார்க்கவில்லை. எனது தந்தைக்காக நான் சாட்சி சொல்வதற்கு பவர் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. எனது தந்தை கையெழுத்து போடுவாரா என்றால் முன்னால் போடுவார், தற்போது 2 வருடங்களாக கையெழுத்து போடமுடியாது. எனது தந்தை எவ்வளவு இடத்திற்கு வழக்கு போட்டுள்ளார் என்று தெரியுமா ஏன்றால் தெரியும் 94 செண்டிற்கு வழக்கு போட்டுள்ளார். வள்ளியம்மாள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவருடைய சொத்து வழக்கு சொத்திற்கு எந்தப்பக்கம் உள்ளது என்றால் கிழக்கு பக்கம் உள்ளது. எனது தகப்பனார் வா.சா.ஆ,2 ஆவணத்தின்படி பாண்டி என்பவருக்கு 80 செண்ட் இடம் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 94 செண்டில் 80 செண்ட் இடம் மட்டும் எனது தந்தை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதை மறுபடியும் கிரையம் வாங்கிவிட்டோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள முத்துப்பாண்டி என்ற கையொப்பம் எனது தந்தையுடையது என்றால் ஆமாம். எனது தந்தை பெயர் முத்துபாண்டியா அல்லது முத்துபாண்டியனா என்றால் முத்துப்பாண்டிதான். நாங்கள் மறுபடியும் கிரையம் பெற்ற 80 செண்ட் பத்திரத்தில் முத்துபாண்டி என்று உள்ளது ஆனால் ஆவணத்தில் முத்துபாண்டியன் என்று உள்ளது என்றால் எனது அப்பாவைக்கேட்டால்தான் தெரியும். எனது அப்பாவை முத்துபாண்டி என்றுதான் கூப்பிடுவார்களா என்றால் ஆமாம். எனது அப்பாவின் பெயர் ஆவணத்தில் எவ்வாறு உள்ளது என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் கண்டுள்ள கையெழுத்து எனது தந்தையின் கையெடுத்து இல்லை. அந்த விபரமும் எனது அப்பாவை கேட்டால்தான் தெரியும் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து 94 செண்டில் 14 செண்ட் நிலத்தை 04.07.96 எனது அப்பா பிரதிவாதிக்கு வாக்கரலாக கிரையம் கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. 14 செண்ட் பிரதிவாதிக்கு கொடுத்துவிட்டதால்தான் அதை ஒதுக்கிவிட்டு பாண்டிக்கு வா.சா.ஆ,2 பிரகாரம் கிரையம் கொடுத்தார் என்று சொன்னால் இல்லை. 14 செண்ட் இடத்திற்கு பிரதிவாதி,

எனது அப்பா பெயரில்தான் கூட்டுபட்டா உள்ளது என்றால் இல்லை. 14 செண்ட் இடத்தை பிரதிவாதிதான் அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை. 14 செண்ட்டை கிரையம் கொடுத்ததால்தான் எனது தந்தை பிரதிவாதிக்கு பதிவு செய்யாத கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்திருக்கிறார் என்றால் இல்லை. 14 செண்டை கிரையம் பெற்றதால்தான் எனது அப்பாவின் சம்மதத்தின் பெயரில்தான் பிரதிவாதி பெயரிலும், எனது அப்பாவின் பெயரிலும் கூட்டுபட்டா உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், அதனை நான் எந்தக் காலத்திலும் அனுபவிக்கவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ,5 பட்டாவை ரத்து செய்ய வருவாய்துறையில் எந்த மனுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ரசீது கூட்டாகத்தான் உள்ளது என்று சொன்னால் எனது அப்பாவம் சித்தப்பாவும் சேர்ந்து இருந்தபோது கூட்டுபட்டாவாக இருந்தது. பிரதிவாதி பெயரில் மாறிவிட்டது. 14 செண்ட் தாவா சொத்தை எனது தந்தை வாக்கரலாக கிரையம் கொடுத்தது அதற்கு ஆதரவாக பத்திரம் பதிவு செய்யப்படாத காரணத்தால் பொய்யான விபரங்களை சொல்லி வழக்கை போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளதால் சுவாதீனப்பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரியுள்ள நிலையில் வழக்கு செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தை நல்ல உடல்நிலையில்தான் உள்ளார் என்றும் அவர் நீதிமன்றத்திற்கு வந்தால் உண்மை தெரிந்துவிடும் என்ற காரணத்தினால்தான் அவர் சாட்சியம் அளிக்க வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தைக்காக சாட்சியம் அளிக்க எவ்வித பவர்பத்திரம் பெறாததால் நான் சாட்சியம் அளிப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.